பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 26 திங்கட்கிழமை (12.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 346

# நம்பகரமான அதிகாரப் பரவலுடன் பேச்சு மூலமான அரசியல் தீர்வு

## வட அயர்லாந்து முறையே சிறந்தது என்கிறார் சிதம்பரம்



கொழும்பு,நவம்பர்12

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நம்பகரமான அதிகாரப் பரவலுடன் கூடிய அரசியல் தீர்வே சிறந்தது. இறுதித் தீர்வானது இராணுவ வழிகளில் அல்லாது சமாதானப் பேச்சின் ஊடாகவே எட்டப்படவேண்டும்.

வட அயர்லாந்து போன்று இலங்கையிலும் சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டு, அரசியல் தீர்வு காண்பதே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரே வழி.

இலங்கையின் பிரச்சினைகள் குறித்து இந்தியா எப்போதும் கரிசனையாகவே இருக்கிறது.

கொழும்புக்கு நேற்று ஒருநாள் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் இவ்வாறு தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவுப் பேருரையை அவர் ஆற்றினார்.

அப்போதுஅவர் கூறியதாவது:-

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வானது இராணுவ வழிகளில் அல்லாது சமாதானப் பேச்சின் ஊடாகவே எட்டப்படவேண்டும்.

இனப்பாரபட்ச உணர்வினாலும் - கலாசார மொழி மற்றும் மனித உரிமைகள் வேறுபாட்டினாலும் எழுந்த இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலமாக அரசியல் தீர்வு ஒன்று (08ஆம் பக்கம் பார்க்க)

## பாண்,பணிஸ் விலைகள் ஒரு ரூபாவால் குறைப்பு

யாழ்ப்பாணம், நவ.12

பாண், பணிஸ் ஆகியவற்றின் விலைகள் குடாநாட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் ஒரு ரூபாவால் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள விலைக்கு நாளைமறுதினம் புதன்கிழமை வரை மட்டுமே பாண் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் பேக்கரிச் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

புதிய விலை விவரம் வருமாறு:-

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு வங்கிகளிடம் ரூ.5,600 கோடியைக் கடனாக வாங்கி உள்நாட்டு வங்கிக்கடன் ரூ.5,200 கோடியை அடைத்தது அரசு!

### உண்மையை அம்பலப்படுத்துகிறது ஐ.தே.க.

கொழும்பு,நவ.12

எச்.எஸ்.பி.சி. போன்ற வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து உயர்ந்த வட்டிக்கு சுமார் ஐயாயிரத்து 600 கோடி ரூபாவைக் கடனில் பெற்ற அரசு அதில் ஐயாயிரத்து 200 கோடி ரூபாவை ஏற்கனவே உள்ளூர் வங்கிகளிடமிருந்து தான் பெற்ற கடன்களுக்காக அவ்வங்கிகளுக்குச் செலுத்தியிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காஸிம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கபீர் காஸிம் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவைவருமாறு:-

எச்.எஸ்.பி.சி. வங்கி இலங்கை அரசிற்கு கடந்த மாதம் 24ஆம் திகதி அரசு கேட்டிருந்தபடி 5 ஆயிரத்து 600 கோடி ரூபாவை வழங்கியது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே இந்தக் கடனைப் பெறுவதென மக்களிடம் கூறிக்கொண்டே அரசு இந்த நிதியை எச்.எஸ்.பி.சி. வங்கியிடம் இருந்து பெற்றது.

அந்த நிதியில் பெருந்தொகையைத் தான் ஏற்கனவே உள்ளூர் வங்கிகளிடமிருந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## வியாழன்முதல் கோதுமை மாவின் விலை யாழ். குடாநாட்டில் 68 ரூபா 50 சதம்

### ப.நோ.கூ. சங்கங்களில் பங்கீட்டுக்கு

யாழ்ப்பாணம், நவ.12

குடாநாட்டில் கோதுமை மாவின் விலை ஒரு கிலோவுக்கு 4.50 சதம் குறைக்கப்படுகின்றது. எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் புதிய விலை நடைமுறைக்கு வருகின்றது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

கடந்த மாதம் 73 ரூபாவாக விலை உயர்த்தப்பட்ட கோதுமை மா எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 68.50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

'யால' கப்பல் மூலம் இப்போது எடுத்து வரப்பட்ட கோதுமை மா, சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோதுமை மாவைப் பெறுவதற்கான வழங்கற் கட்டளைகளை சங்கங்கள் இன்று யாழ். செயலகத்தில் காலை 9 மணிக்கு பெற்று களஞ்சியத்தில் இருந்து எடுக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

களஞ்சியத்தில் பெறும் கோதுமை மாவைப் பங்கீட்டு அடிப்படையில் மட்டுமே மக்களுக்கு விநியோகிக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## காவல்துறைக்குப் புதியவரை புலிகளின் தலைமை நியமிக்கும்

கொழும்பு, நவ. 12

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறைப் பொறுப்பாளராகப் பதவி வகிக்கும் பா.நடேசன், அரசியல்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமையை அடுத்து புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளராகப் புதியவர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பதவி வகித்துவந்த சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலைக்குப் பின்னர் அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்ட பா.நடேசன், தான் வகித்துவரும் காவல்துறைப் பொறுப்பாளர் என்ற பதவியையும் தொடர்ந்து வகித்து வருகின்றார்.

இந்நிலையில், அரசியல்துறைப் பொறுப்பாளராக மட்டுமே தாம் இனிப்பதவி வகிப்பார் எனத் தெரிவித்திருக்கும் நடேசன், காவல்துறைப் பொறுப்புக்கு புலிகளின் தலைமை வேறு ஒருவரை விரைவில் நியமிக்கும் என்றும் தகவல் வெளியிட்டார் எனக் கூறப்படுகின்றது.

தமிழகத்திலிருந்து வாரம் இருமுறை வெளியாகும் 'நக்கீரன்' இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியை இரண்டாக உடைத்து பட்ஜெட்டை நிறைவேற்ற அரசு முயற்சி

கொழும்பு,நவ.12

ஜே.வி.பியை உடைத்து அதில் ஒரு பிரிவினரின் வாக்குகளின் மூலம் தமது வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்ற மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத் திட்டத்தின்போது அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. வாக்களித்தால் அரசாங்கம் தோல்வியடைய வாய்ப்புள்ளது.

அக்கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைத்து வரவு - செலவுத் திட்டத்தை நிவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மஹிந்தவின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் இளைஞர் அணித் தலைவருக்கு சத்தியபவனுக்குள் புகுந்து வாள்வெட்டு!

சென்னை,நவ.12

இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு கிளையின் இளைஞர் அணித் தலைவர் வாள் வெட்டுக்கு இலக்கானார். பலத்த காயமுற்ற அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் சென்னைத் தலைமையகமான சத்தியபவனில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தவேளை, மாலை 6 மணியளவில் அங்கு உட்புகுந்த கோஷ்டி ஒன்று அவரை வாளால் வெட்டியது. ஆபத்தான நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கொலைக்கு இரங்கல் பேரணி நடத்துவதற்கு சென்னை மாநகர ஆணையாளர் தடைவிதித்திருக்கும் சூழ்நிலையில் இந்த வாள்வெட்டு சம்பவம் நிகழ்ந்துள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் கொலையை கண்டித்து சென்னையில் இன்று மௌன ஊர்வலம்

விடுதலைப்புலிகளின் அரசியப் பொறுப்பாளர் பிரிகேடியர் .தமிழ்ச்செல்வன் கொலையைக் கண்டித்து இன்று சென்னையில் மௌன ஊர்வலம் ஒன்று இடம்பெறவிருக்கிறது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த ஊர்வலம் மாலை 4 மணியளவில் சென்னை மன்றோ சிலையில் இருந்து ஆரம்பித்து சேப்பாக்கம் அரச விருந்தினர் மாளிகை அருகே முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஊர்வலத்திற்கு தமிழக விடுதலை ஆதரவாளர் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமை தாங்குகின்றார். அத்துடன் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவன், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமத், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர்மணி ஆகியோரும் பங்கேற்பர். (சி)

(பேரணித் தடை: 8ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடமராட்சிப் பகுதியில் கட்டுப்பாடின்றி பயன்தரு மரங்கள் தறிக்கப்படுகின்றன

உடுப்பிட்டி,நவ.12

வடமராட்சிப் பிரதேசத்தில் பயன்தரு மரங்கள் கட்டுப்பாடு இன்றி வெட்டப்படுகின்றன. தத்தம தேவைக்கு விருப்பம் போல் பெரு விருட்சங்களும மா, பலா, வேம்பு, பனை போன்ற பயன்தரு மரங்களும் தடுப்பாரின்றி தறிக்கப்படுகின்றன.

மரங்களை வெட்டுவதற்கான அனுமதி முறை கள் எதுவும் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. சொந்தத் தேவைகளுக்கெனத் தமது விருப்பத்துக்கு ஏற்ப பயன்தரு மரங்கள் வெட்டப்படுகின்றன.

குறிப்பாக இப்பகுதியில் நடைபெற்றுவரும் கட்டட நிர்மாண வேலைத்திட்டங்களுக்குத் தேவைக் கேற்றவாறு மேற்கூறிய மரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதைக் காண முடிகிறது.

இதனால் இப்பிரதேசத்தின் பசுமை வளமும் மழை வளமும் பெரிதும் குன்றும் ஆபத்து உருவாகி வருவதாக சூழல் பேணும் பிரக்ஞை உள்ள பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிர்காலத்தில் மேற்கூறிய மரங்களின் உற்பத்திகளான பழவகைகளினதும் மற்றும் புளுக்கொடியல், பனாட்டு, ஒடியல் மா, பனங்கட்டி ஆகிய பனம்பொருள்களின் உற்பத்தி குன்றிவரும் அபாயமும் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-155)



'தகவல் தொழில்நுட்பம்' நூலின் மூன்று பாகங்களை குறைந்த காலப்பகுதியில் வெளியிட்டு கல்விப் பொதுத் தராதர மாணவர்களின் குறையை நீக்கிய ஆசிரியர் கே.ஆர்.சுகுமார் புனர்வாழ்வுக் கல்வி நிறுவனத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த மாதம் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற அவரது நூல் வெளியீட்டு விழாவில் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, பாராட்டுப் பத்திரம் வழங்குவதை மேலே உள்ள படத்தில் காணலாம். புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் பண்டிதர் சி.செல்லத்துரையும் அருகில் உள்ளார்.

## நல்லூரில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ.12

யாழ் - பருத்தித்துறை வீதியில் - சட்டநாதர் கோவிலுக்கு சமீபமாக - நேற்றுக் காலை 9 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நல்லூர், குறுக்குத் தெருவைச் சேர்ந்தவரான திருச்செல்வம் ஜெயக்குமார் (வயது - 31) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் கிறேசர் கல் ஏற்றி இறக்கும் பாரவூர்தி சேவை ஒன்றின் உரிமையாளராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

(அ-203-68)

## மயானம் புனரமைப்பு: வியாழன் அடிக்கல் நடப்படும்

யாழ்ப்பாணம்,நவ.12

உரும்பிராய் வடக்கு எருவன் இந்து மயானத்தின் புனரமைப்பு வேலைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மயானத்தின் புனரமைப்புக் குழுத் தலைவர் சு.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலர் த.நடராசா உட்படப் பலர் அடிக்கல் நடுவர்.

(அ-1)

## தெல்லிப்பழையில் பாரவூர்தி சங்கக் கிளை

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தெல்லிப்பழை கிளை அலுவலகம் தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

(1-224)


**உடன் தேவை**

கல்பேட், ஊர்க்கோழிகள் குஞ்சுகள் உடன் தேவை.

தாசன் பாம்

158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.



அதிரடி offer

Monitors
CRT Original View Sonic 15"-13000/=
CRT 15"-12500/=
CRT 17"-16000/=
LCD 17"-25000/=

Boofers
creative 2.1(SBS 330) -4300/=
creative 2.1 (SBS 380) -4500/=
creative 5.1 (SBS 580) -10500/=
creative 5.1 INSPRE -13500/=

Roms
DVD R/W(Samsung) -4900/=
combo (Samsung) -4200/=
combo (Sony) -4500/=
CD R/W-3400/=

Flash
Kingston 1GB - 1650/=
Kingston 2 GB - 2700/=
Kingston 4 GB - 5700/=

MotherBoards
Original Intel DDR 2 -11900/= (With Box)
Asrock DDR 2 -7600/= (With Box)
Gigabyte DDR 2 -7500/= (With Box)
Biostar DDR 2 -6800/= (With Box)

Printers
HP Laser Jet 1020 - 19750/=
HP All-In-One - 14900/= (Printer,Scanner,Photo copy)
HP Office Jet 4355 - 22000/= (Fax,Printer,Scanner,Photo copy)

Hard Disks
80 GB Sata/IDE -5900/=
160 GB Sata / IDE -6800/=

Scanner -7900/=
Fax Modem -850/=
Power Supply -2300/=
Speaker - 490/=
Key Board - 500/=
Glass Filter - 390/=
VGA Card - 4100/=
USB Mouse - 400/=

Ram(Kingston)
DDR 1 512 MB -4800/=
DDR 2 512 MB -2800/=
DDR 2 1GB-4750/=

Processor
Intel Core2 Duo LGA 3.0 Ghz -12500/=
Intel 3.0 Ghz/2m LGA - 9100/=

1 CD Glass Cover - 25/=
2 CD Plastic Cover - 15/=

TV Tuner Card
SONY floppy Drives
Computer Cables
Head Phons
Laser & Optical Mouse
Sata & IDE External Cable
CPU Colling Fan

Soft Wares & Game Cd s 75 /=

DVD Recorder (Samsung) - 48000/=
All Brand Of Cashing & UPS

Waranty 1 & 3 Years With Services

MUSIC WORLD

141 B பலாலி வீதி தபாற்பெட்டி சந்தி திருநெல்வேலி


## அடுத்த ஆண்டுக்கான பாடசாலைத் தவணைகள்

யாழ்ப்பாணம், நவ.12

2008ஆம் ஆண்டுக்கான பாடசாலைத் தவணை அட்டவணையை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதன் விவரம் வருமாறு-

**தமிழ் - சிங்களப் பாடசாலைகளுக்கானது**

முதலாம் தவணை - 2008 ஜனவரி 2ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 2008 ஏப்ரல் 09ஆம் திகதி புதன்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

2ஆம் தவணை - 2008 ஏப்ரல் 21ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2008 ஓகஸ்ட் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

3ஆம் தவணை - 2008 செப்ரெம்பர் 01ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2008ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதி வியாழக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

இதேவேளை இந்த ஆண்டு மூன்றாம் தவணை டிசெம்பர் மாதம் 7ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

**முஸ்லிம் பாடசாலைகளுக்கானது**

முதலாம் தவணை - 2008 ஜனவரி 2ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 2008 ஏப்ரல் 9ஆம் திகதி புதன்கிழமை வரை(இரு தினங்களும் உட்பட)

2ஆம் தவணை - 2008 ஏப்ரல் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒகஸ்ட் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

3ஆம் தவணை - 2008 ஒக்ரோபர் 06ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2008 டிசெம்பர் 11ஆம் திகதி வரை( இரு தினங்களும் உட்பட)

(அ-11)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு உமாகாந்தன்

(யாழ். தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும் தற்போது உயர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும்)

74, ஏ.வி.றோட், கொழும்புத்துறையைச் சேர்ந்த சிவகுரு உமாகாந்தன் நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74, ஏ.வி.றோட், கொழும்புத்துறை.*
*தொ.பே. 0212227219*

தகவல்:
தர்சிகா, தனஞ்சயன் *(பிள்ளைகள்)*

### திருமதி நடராசா கனகம்மா

வரணி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா கனகம்மா நேற்று(11.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் ஜெ.உமாதேவி (மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), ஜெகதீஸ்வரன் (சாரதி - ஹலோ ட்ரஸ்ட்) ஆகியோரின் தாயும் ஜெயவீரசிங்கம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஜெ.சர்மிலா ஆகியோரின் மாமியும் அதுசன், ஜீவகன், வைகுந்தன், ஆரூரன், லாவண்யா, அபிராம், சதுஸ்ணா, சாயிராம் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (11.11.2007) பிற்பகல் 4 மணிக்கு கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

### திருமதி சுப்பிரமணியம் தங்கலட்சுமி



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தங்கலட்சுமி நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர்- செல்லாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் யோகேஸ்வரி, பரமேஸ்வரி, தனேஸ்வரி காலஞ்சென்ற பாலகிருஸ்ணன், செல்வறஞ்சன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயும் கனகலிங்கம், பொன்னுத்துரை, செல்வானந்தம், இந்திராதேவி, கலைவதனி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நாளை மறுதினம் (14.11.2007) புதன்கிழமை நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*687/ 27, மானிப்பாய் வீதி,*
*ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.* (67868)

தகவல்:
செல்வானந்தம் *(மருமகன்)*,
தனேஸ்வரி *(மகள்)*.

### திருச்செல்வம் ஜெயக்குமார்(சுதா)

(சுதா கிறேசர் ரான்ஸ்போட்)



நல்லூர் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வம் ஜெயக்குமார் நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் திருச்செல்வம் - விஜியராணி தம்பதியரின் அன்பு மகனும் விஜியகாந்தன் (லண்டன்), விமலகாந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் மருமகனும் விஜியகுமாரி (ஜேர்மனி), விக்னேஸ்வரி(ஜேர்மனி), விமலராணி (கொலண்ட்) விமலேஸ்வரி (ஜேர்மனி), ராகினி(கனடா), காலஞ்சென்ற விஜயசுந்தர் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற திரு. திருமதி வில்பேட் சில்வா, சிவானந்தசோதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.11.2007) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர்.*
*தொ.பே. 021 222 2672* (67871)

தகவல்:
இ.திருச்செல்வம்
(தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டராசிரியர்கள் 171 பேருக்கு வடமாகாணத்தில் விரைவில் நியமனம்

## நேர்முகப்பரீட்சை மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளது

அச்சுவேலி, நவ.12

வடமாகாண பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களில் 171 பேருக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் மாவட்டமட்டத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களில் 171 பேருக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்குவதற்கான அனுமதி மத்திய கல்வி அமைச்சினால் வடமாகாண கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில் 3 கல்வி வலயங்கள் தவிர ஏனைய 9 கல்வி வலயங்களில் இருந்தும் 171 பேர் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னர் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியான வகுப்பறைக் கற்பித்தல் பணியில் ஈடுபட்டவர்களில் இருந்து ஆசிரிய உதவியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆசிரிய உதவியாளர் நியமனத்தில் ''தவறான அறிக்கைகள் சிபார்சுகளை செய்யும் அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன் அறிவித்துள்ளார். (203- 11)

# சமயதீட்சை வழங்கும் நிகழ்வு வெள்ளியன்று

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சமயதீட்சை நிகழ்வு நடத்தப்படும்.

சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஏழு வயதுக்கு மேற்பட்ட இரு பாலரும் தீட்சை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# மழுவை மயானத்தில் தகனம் செய்வதில் சிரமம்

சுழிபுரம், நவ.12

சுழிபுரம் மழுவைப் பகுதி மயானத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் தகனக்கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுழிபுரம் பிரதேச மக்கள் இறந்தவர்களைத் தகனம் செய்யும் ஒரேஇடம் இதுவாகும்.

இப்பகுதி மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு காட்டுப் பகுதியாக இருப்பதாகவும் இங்கு செல்லும் வீதிகள் சீரின்றிக் காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதே வேளை மழைகாலங்களில் மயானத்தில் தகனக்கிரியைகளை மேற்கொள்வது பெரும் சிரமமாக உள்ளது. மழையில் நனைந்து கொண்டே கிரியைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (203-28)

# குடாநாட்டில் பால்மா வகைகளுக்குத் தட்டுப்பாடு: நோயாளர்கள், குழந்தைகளே பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பால்மா வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் நோயாளர்கள் மற்றும் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கர், லக்ஸ்பிறே, நெஸ்பிறே போன்ற பால்மா வகைகளின் கையிருப்புகள் யாவும் தீர்ந்துவிட்டதாக வர்த்தக நிலையங்களில் கூறப்பட்டு வருகின்றது.

இதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாகக் குழந்தைகள் மற்றும் நோயாளர்கள் ஆகியோருக்கு பால்மா கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை- சில தனியார் வர்த்தக நிலையங்களில் அதிகரித்த விலைகளில் பால்மா விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் பால்மா வகைகளை நியாயமான விலையில் விற்பதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் ஏன் மேற்கொள்ளக் கூடாது எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (203-224)

# மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.தற்போது பெய்துவரும் மழை, மற்றும் விரத காலங்களை அடுத்தே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்தரிக்காய் கிலோ 250 ரூபாவாகவும் முருக்கங்காய் 300 ரூபாவாகவும் வெண்டிக்காய் 80 ரூபாவாகவும் பாகற்காய் 150 ரூபாவாகவும் பூசினிக்காய் 50 ரூபாவாகவும் கோவா 160 ரூபாவாகவும் பச்சைமிளகாய் 120 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதே வேளை கீரை ஒருபிடி 25 ரூபாவாகவும் வெங்காயம் 30 ரூபா தொடக்கம் 40 ரூபாவரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், கல்வியங்காடு போன்ற மரக்கறிச் சந்தைகளிலும் அதிக விலையிலேயே மரக்கறி வகைகள் விற்பனையாகின்றன. இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (203-224)

# காரைநகர் கடற்றொழிலாளர் 27 பேருக்கு படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்கள்



காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 27 கடற்றொழிலாளருக்கு எவ்.ஏ.ஓ. நிறுவனம் படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கியுள் ளது.

அம்பாள் கடற்றொழிலாளர்கள் சங்கம், சிவகௌரி கடற்றொழிலாளர் சங்கம், ஐயனார் கடற்றொழிலாளர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களைச் சேர்ந்த 27 பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 27 படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் பயனாளிகளுக்கு மோட்டார்களை வழங்கினார்.

நிகழ்வில் கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கம், காரைநகர் மத்தி கிராம அலுவலர் ஆர்.திருப்புகழூர்சிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (203- 250)

# தவறவிடப்பட்ட கைச்சங்கிலி வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.12

நல்லூர் திருவிழாக் காலத்தின் போது தவறவிடப்பட்ட கைச்சங்கிலி ஒன்று நாளை மறு தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனையில் வைத்து உரியவர்களிடம் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸன் தெரிவித்துள்ளார். (203)

# தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி: விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

திருமறைக்கலாமன்றம் பாடசாலை மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் நடத்தப்படவுள்ள தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றம் அடுத்த மாதம் நடத்தவுள்ள நாட்டுக்கூத்து விழாவின் ஓர் அங்கமாகவும் கூத்துக் கலையை பேணும் நடவடிக்கையாகவும் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

திறந்த போட்டியில் ஒரு மணித்தியாலமாகவும் பாடசாலை மட்டப் போட்டியில் 30 நிமிடமாகவும் நாட்டுக் கூத்துக்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

பாரம்பரியமான நாட்டுக்கூத்து ஆற்றுகைகளுடன் மரபுவழிக் கூத்தின் கட்டமைப்பிற்குள் படைக்கப்பட்ட புதிய கூத்து ஆற்றுகைகளும் போட்டியில் இடம்பெறலாம்.

டிசெம்பர் முற்பகுதியில் நடத்தப்படவுள்ள இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிவரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அனேகரின் வேண்டுகோளுக்கமைய விண்ணப்பமுடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது. இதன் முடிவு திகதி கடந்த 5 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (203)

# வீதிசேதமுற்றதால் மாணவர் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.அரசடி வீதியில் கந்தர்மடம் சந்திக்கு அருகில் பெரிய அளவில் வீதி சேதமடைந்து உள்ளது.

இதனால் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர். பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இவ் வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் சிரமமடைந்து வருகின்றனர். உரியவர்கள் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முன்வர வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (203- 224)

# வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12

தற்போது பெய்து வரும் மழையை அடுத்து வலி.கிழக்குப் பிரதேசத்தில் நுளம்பின் பெருக்கம் என்றும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, மாசியன், கரந்தன் போன்ற பகுதிகளில் நுளம்பின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

இப் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதிகள், ஒழுங்கைகள் போன்றவற்றில் இரு மருங்கிலும் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் அழிக்கப்படாமல் இருப்பதும் மற்றும் ஆள்கள் குடியிருக்காத காணிகளில் உள்ள பற்றைகளும் நுளம்பு வேகமாகப் பெருகி வருவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப் பட்டது.

இப்பிரதேச வீதிகள் மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்து நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203- 224)

# இன்றைய ஆட்டங்கள்

வலி. வடக்கு, நவ.12

வலிகாமம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் மானிப்பாய் றெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம்.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம். (203-86)

# சுன்னாகம் மயிலணியில் தையல் பயிற்சி நிலையம்

சுன்னாகம், நவ.12

சுன்னாகம் ஜனசக்தி கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினால் மயிலணியில் அமைக்கப்பட்டுள்ள தையல் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழா இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு சி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ. கனகசபாபதி, சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம், மகளிர் அபிவிருத்தி அலுவலர் திருமதி. செ.வேதவல்லி உடுவில் பிராந்திய சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன், கிராம அலுவலர் பா.பாலபதமன் ஆகியோர் கலந்து கொள்வர். (203-86)




காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயக்குமார் நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதையும் காரைநகர் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் அருகில் நிற்பதையும் சிகிச்சைபெற வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

காரைநகர் அபிவிருத்திச் சபையும், சிவபூமி அறக்கட்டளையும் இணைந்து இம் மருத்துவ முகாமை ஏற்பாடு செய்திருந்தன. (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக் கிருத்திய அழைப்பு



## அமரர் பொன்னு பாலசிங்கம் (கிளி)

கடந்த 14.10.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் பொன்னு பாலசிங்கம் (கிளி) அவர்களின் வீட்டுக்கிருத்திய வைபவம் நாளை (13.11.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*11, 5ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* குடும்பத்தினர்.

(67863)

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை பாலசிங்கம்

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை பாலசிங்கம் (10.11.2007) சனிக்கிழமை அன்று காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை மற்றும் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணி, கதிர்காமு (மணி), வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், சிவசோதியின் அன்பு கணவரும், அற்புதராணி (கமலா), புஸ்பலதா, பிறேமலதா, பாஸ்கரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), பிரபாகரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம், விஜயகுமார், சகிதா (பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் மாமனும் சுஜிர்தா, அஜிதா, வனிதா, சஜிவன், சஜிந்தன், சஜிந்தா ஆகியோரின் பேரனும் தர்னிகா, லக்சிக்கா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2007) திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நிரந்தர முகவரி - மறவன் புலோ மத்தி, சாவகச்சேரி.*
*தற்காலிக முகவரி - உச்சியோடை லேன், மானிப்பாய்*

தகவல்: குடும்பத்தினர்.

(67864)


# டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண சுத்திகரிப்பாளா | 350 | டிர்ளர் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டிர்ளர் 500/- |

**விதிகளும் நிபந்தனைகளும்**

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்டு(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் இருவழி விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும். தகுதிகாண காலவரை 90 நாட்கள்.

* வங்கிக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் நவம்பர் 6 லிருந்து 20 வரை
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

* உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

**அராபியன்றோயல்குறூப் (பிறைவேட்) லிமிடெட்**
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

01. மருதமுனை - 03. தொலைபேசி: 077-6968684/077-9027572
02. ஆரையம்பதி - 01. தொலைபேசி: 077-9911303/065-2247715
03. பெரியபோரதீவு(பம்மியடியூற்று) தொலைபேசி: 077-5000474/065-4921964
04. மருதமுனை 04. தொலையபசி: 077-7405996/067-2220877
05. கிரான்குளம் -08. தொலையபசி: 077-5024029/060-2641572
06. சூராவத்தை. தொலைபேசி: 077-524554/077-3405643
07. [illegible] இல.22, [illegible] சுன்னாகம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 011 2514005


# அதிபர் பதவிக்குக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.12

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை அதிபர் சேவை தரங்களில் உள்ளவர்களும், இலங்கை ஆசிரிய சேவையில் வகுப்பு 2 தரம் II உம் அதற்கு மேற்பட்ட தரங்களைக் கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் வலயக்கல்வி அலுவலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று சம்பந்தப்பட்ட அதிபர், கோட்டக்கல்வி அலுவலர் ஆகியோர் ஊடாக எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

932 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 05 34 40 48

09-11-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5297799 - 5312511

ஜக்பொட் பரிசு ரூபா. 1,738,050/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 319,883 | 10/- | 3,198,830/- |
| 2 இலக்கங்கள் | 29,366 | 20/- | 587,320/- |
| 1 இல. + லக்கினம் | 29,009 | 30/- | 870,270/- |
| 2 இல. + லக்கினம் | 2,674 | 100/- | 267,400/- |
| 3 இலக்கங்கள் | 777 | 500/- | 388,500/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,738,050/- | 1,738,050/- |
| மொத்தம் | | | 7,820,370/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 381,793 | | 8,843,870/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 5301892-6-31 |
| கம்பஹா | 5309796-5-73 |
| மொணராகலை | 5303787-8-11 |
| மாத்தறை | 5299990-2-28 |
| கண்டி | 5306656-9-02 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



# Mega Sales

ATX Case wiith smps 4750/=

Hp Laser 1020 20250/=

Rams
DVD - Rw (Sony, Samsung) - 5300/=
Combo Sony - 4900/=
DVD-Rw Sony - 5900/=
DVD-Rw light scvibe(Asus) - 5900/=
Combo Samsung - 4400/=

Intel Celeron D 3.06 GHz Processor
Core 2 Duo Support Mother board
256 DDR Ram, 40 Gb Sata HDD
Combo DVD/CD - Rw,
ATX Cats with SMPS
Key Board, Mouse.
Monitor CRT
39,999/=

Intel 3.0 GHz/2m Processor
Core 2 Duo Support Mother board
512 DDR 2, 80 GB HDD Sata
Combo DVD / CD - Rw
ATX Case with SMPS
Monitor CRT
49, 999/-

Mother Board
Intel Orignal DDR 2 - 12500/=
AsRock DDR 2 - 7750/=
Fox Conn DDR 2 - 7750/=
Asus 945 DDR 2 - 9500/=
Asus P5s mxseDDR2 - 7750/=
Asus DDR 1 - 7600/=
AsRock DDR 1 - 6500/=

Monitor
LCD (LG) - 25500/=
15" CRT - 12750/=
17" CRT - 16500/=

CD
banana A Grade
A/L A Grade
20/-

VGA Caerd 4250/=

Hard Dicks
80 GB Sata - 6500/=
160 GB Sata - 7250/=

Key board 550/=

Opticol mouse 600/=

Wine less mouse 1500/=

Power Supply 2400/=

Hp desk set D1360 6500/=

Fox modem 900/=

Kingston 256mb DDR1 - 2900/=
Kingston 512mb DDR 1 - 4900/=
Kingston 256mb DDR2 - 1900/=
Kingston 512 DDR 2 - 2850/=
Kingston 1GB DDR 2 - 4800/=

Processor
Intel Corel 2 Duo LGA - 17500/=
Intel 3.0 GHz/2m LGA - 9350/=
Intel Celeron 3.06 GHz LGA - 6500/=

Creative 2.1 4750/=

Flash
1 GB Kingston - 1750/=
2 GB Kingston - 2900/=

Seanner 8000/=

Warranty 1&3 Years With Services
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

திருமுருகன் கொம்பியூ
259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)


# கழிவுகளால் சுகாதாரக்கேடு

வடமராட்சியில் மக்கள் நடமாடும் பகுதிகளில் முடிதிருததும் நிலையங்களின் கழிவுகள் மூடை மூடையாகக் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் நடமாடும் வீதிகளின் ஓரங்களிலும் பாலங்களுக்குள்ளும் இவை கொட்டப்படுகின்றன. இவை குறித்து சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சுகாதாரத்தை பேண உதவுமாறு மக்கள் கேட்டுள்ளனர். (203-155)

# நியமனம்

அச்சுவேலி, நவ.12

கரணவாய் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய இளவாலையைச் சேர்ந்த இரத்தினம் தமிழ்மாறன் கல்வி நிர்வாகச் சேவை தரம் 3 இற்குப் பதவி உயர்வு பெற்று வடமாகாணக் கல்வித் திணைக்களத் திட்டமிடல் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற மட்டுப் படுத்தப்பட்ட கல்வி நிர்வாகசேவை போட்டிப் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்றவர். அதனடிப்படையில் கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (203-11)

# மரண அறிவித்தல்கள்

## சிற்றம்பலம் வைத்திலிங்கம்

அராலி தெற்கு, வேப்பியணையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மேற்கு, அம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் வைத்திலிங்கம் நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், செல்லாட்சி தம்பதியரின் மகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், முத்துப்பிள்ளை, பொன்னுத்துரை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பிகையின் பாசமிகு தந்தையும், துரைரத்தினத்தின் மாமனும், உஷாந்தி (கனடா), சாந்தன், காலஞ்சென்ற நிஷாந்தி மற்றும் கிரீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கவிஷன்(கனடா), கிரிஷா (கனடா), யதுசாந்தன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


*ஐயன்னா வீதி, அம்பனை,*
*சுன்னாகம் மேற்கு.*

(67866)

தகவல்: குடும்பத்தினர்.

## அமரர் தங்கராசா ஞானச்சந்திரன்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வதிவிடமாகவும்கொண்ட தங்கராசா ஞானச்சந்திரன் நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா-கிறேஸ் பூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், வேலாயுதம் -தனலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், கிறேஸ் அஜந்தா (HNDA முதலாம் வருட மாணவி), எட்வேட் அயின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரவதனா, பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன், சுகுணச்சந்திரன், ஜீவச்சந்திரன், குலச்சந்திரன், நவச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஜெயந்தி, வசந்தராஜன்(சுவிஸ்), ஜெயராஜ் (லண்டன்), விஜியந்தி, கஜந்தி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.11.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நல்லடக்க வழிபாடு இடம் பெற்று, முற்பகல் 10 மணியளவில் அளவெட்டி மேற்கு கொட்டுப்பனையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கூட்டுறவாளர் வீதி,*
*அளவெட்டி மத்தி, அளவெட்டி.*

தகவல் மனைவி, பிள்ளைகள்.

(67867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி பூசைத்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், நவ.12

காரைநகர் கருங்காலி போசுகட்டி முருகமூர்த்தி ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் கந்தசஷ்டி விசேட பூசைகள் நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் 15 ஆம் திகதி சூரசங்காரமும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும். (203-250)

* * *

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 15ஆம் திகதி சூரசங்காரம் இடம்பெறும்.(203-250)

* * *

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கந்தசஷ்டி விரத அபிஷேக பூசை வழிபாடுகள் சனிக்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்றன. சூரசங்கார உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (203-250)

* * *

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொடியேற்றத்துடன் கந்தசஷ்டி பூசைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 3 மணிக்கு சூரசங்காரமும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் கொடியிறக்கமும் இடம்பெறும். 17ஆம் திகதி திருக்கல்யாணம் நடைபெறும். (203)

## மக்கள் மாண்பு மக்கள் மாண்பு



சேவைக்கான உயர் விருதான ஆஸ்திரேலிய அரசால் சமாதான நீதிவான் பட்டம் யாழ்ப்பாணம் - இளவாலையைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி - துரைசிங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் இன - மத - மொழி வேறுபாடின்றி சகலருக்கும் தனித்துவமான சேவையை திருமதி மங்கையற்கரசி துரைசிங்கம் மாதர் சங்கத் தலைவியாக இருந்து முழு சமூக சேவை ஆற்றி வந்தார்.

இவரது சேவையைப் பாராட்டி ஆஸ்திரேலியாவின் சட்டம், சமூக சேவைகள் சட்டத்தரணிகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த காலங்களில் சில்லாலை, சண்டிலிப்பாய், முள்ளானைப் பகுதி மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவியாகவும் - பின்னர் வலி. தென்மேற்கு சமாசங்களின் மாதர் சங்கத் தலைவியாகவும் பணியாற்றியுள்ளார்.



ஓய்வூதியர்களையும், அவர்கள் ஓய்வின் பின் நாட்டுக்கு ஆற்றிய சேவையையும் கௌரவிக்கும் முகமாக ஓய்வூதியர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கும் வைபவம் ஒன்று மஹரகமவில் கடந்த மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றது.

அந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலிருந்து திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் விருதினைப் பெற்றுக்கொண்டார். அவர் இராமநாதன் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்து அக் கல்லூரியில் பிரதி அதிபராகவும் அதன்பின் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அதிபராகவும் யாழ்.கல்விக்கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து தனது சேவையை நிறைவு செய்துகொண்டார்.

ஓய்வின்பின் 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் வலி.தெற்கு/ உடுவில் அரசாங்கப் பிரிவின் கிளையின் செயலாளராகத் தொடர்ந்து சேவையாற்றி தலைமைக் காரியாலயத்தின் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்டதன் பலனாக இவ் விருதினைப் பெற்றுள்ளார்.

தனது ஆற்றலுக்கு வித்திட்ட உடுவில் மகளிர் கல்லூரியையும் அங்கு கற்பித்த ஆசிரியர்களையும் அந்நாள் அதிபர் செல்வி அரியம் பரமசாமி அவர்களையும் இவர் மிகவும் நன்றியுடன் போற்றிக் கொள்கின்றார்.

## குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

**(15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.**

### சிம்மம்

மகம் 1 ஆம், பூரம் 1-4, உத்திரம் 1.

சிம்ம ராசி நேயர்களே உங்கள் ராசிக்கு 4 இல் இருந்த குரு பகவான் 5 ஆவது ராசிக்கு வருகிறார். ராசயிலிருக்கும் சனியையும் பார்க்கிறார். உங்களுக்கு நல்ல திருப்பம். உடல் நிலை தேறும். சனீஸ்வரன் தந்த தொல்லைகள் சற்றுக் குறையும். மக்களால் நன்மை யுண்டு. அவர்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டு. புலமைப் பரிசுகள் அவர்களுக் குக் கிடைக்கும் அவர் 9 யையும் பார்ப்பதால் தகப்பனார் வழி வருமானங்கள் கிடைக்கும். அவர்கள் நோய் தீரும். ஸ்தல யாத்திரைகள் கோயில் நிர்மாணங்களுக்கு உதவி சிலர் செய்ய வாய்ப்பு வரும். கணவன் - மனைவி உறவு சீரடையும். புதிய தொழில் துவங்க வாய்ப்புக் கிடைக்கும். இரும்பு சம்பந்தமான தொழில்கள் அதிக வருமானத்தைத் தரும். சிலருக்கு மேல் நாட்டு வேலை. மேல் நாட்டுத் தொடர்பு கிடைக்கும். சிலருக்குக் குழந்தைப் பேறு கிடைக்கும். தடைப்பட்ட திருமணங்கள் கைகூடும். தட்செணாமூர்த்தியை வணங்குவதாலும், சூரிய வழிபாடு, - ஆதித்திய ஹிருதய பாராயணம் செய்வதால் சில காரியத் தடைகள் நீங்கும். ராசியில் இருக்கும் சனி. கேது பகவானுக்கு வழிபாடுகள் செய்வது நல்லது. எதிரிகளுடன் ஜாக்கிரதையாகப் பழகவும். நண்பர்கள், சகோதரர்கள் நட்பாவார்கள். ஆனால் அவர்களுடைய உதவி கிடைப்பது கடினம். வீட்டில் சில பிரச்சினைகள் தோன்றி மறையும். செவ்வாய் பல மாதங்கள் மிதுனத்தில் 11 இல் இருப்பது சொத்துக்கள் வாங்க, விற்க சந்தர்ப்பம் கிடைக்கும். அவற்றால் இலாபமுண்டு. பூர்வீக சொத்துக்களின் பிரிவினையால் சிலருக்கு லாபம் கிடைக்கும். வீட்டுப் பிரிவினைகள் சிலருக்கு நன்மை தரும். தாயாரின் உடல் நிலை தேறும். அவர்களால் சிலருக்கு நன்மையுண்டு. விளையாட்டு வீரர்களுக்கு நல்ல காலம். சிலருக்குப் பெரிய பரிசுகள் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதிகள் 1, 11, 21,10,29 அதிஷ்ட கல்மாணிக்கம். புஷ்பராகம்.

**பெண்களுக்கு:-** உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி மிகவும் விசேடமானதாகும். இந்தக் குருப் பெயர்ச்சி உங்களுக்கு லாபகரமாகவே காணப்படும். எதிர்பார்க்கும் விடயங்களிலிருந்து மகிழ்ச்சியான தீகவல்கள் உங்களைத் தேடி வரும். இந்த 5 ஆம் இட குருவால் தித்திப்பான செய்திகள் வரும். தடைப்பட்டு வந்திருந்த கல்யாணம், கிரகப் பிரவேஷம், குழந்தைப் பாக்கியம் போன்ற தடைகள் நீங்கி சுப காரியங்கள் நடைபெறும். உடல் நலத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீங்கி சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமானதாகவும் இருப்பீர்கள். வேலை தேடும் பெண்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருக்கும் பெண்களுக்கு பதவி உயர்வு இடமாற்றம் போன்றவை அமையும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். சில பெண்களுக்கு இதுவரை வாடகை வீட்டில் இருந்து வந்தவர்கள் சொந்த வீட்டுக்குப் போவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒரு சில பெண்கள் இந்தக் காலத்தில் எதிர்பாராத திருப்புமுனைகள் ஏற்படுத்தி வாழ்க்கையில் வசந்தம் நிலவும். 5 ஆம் இட குருவோடு மற்றக் கிரகங்களும் ஆதரவாக இருப்பதால் எல்லாக் காரியங்களும் மங்களகரமாக இருக்கும்.

**மாணவர்களுக்கு:-** இந்த குருப்பெயர்ச்சி மாணவர்களுக்கு மிகவும் சிறப்பாக அமையும். எந்த முயற்சியானாலும் வெற்றி அடையும். இந்தச் சமயத்தில் அரசாங்க உதவிகளும் கிடைக்கும். பெற்றோர், ஆசிரியர்களிடமிருந்து புகழ் பாராட்டுகள் கிடைக்கும். முயற்சித்தால் வெற்றி அருகில்.

**அரசாங்கவேலை செய்வோருக்கு:-**

உங்களுக்கு இந்தக் குருபெயர்ச்சி உயர்ச்சியான காலமாகும். இந்தக் குருப்பெயர்ச்சி முதல் உங்களுக்கு நல்ல காலம் ஆரம்பமாகும். பேரும், புகழும், வசதி வாய்ப்புகளும் பெருகும். தடைப்பட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். அரசாங்கத்திலிருந்து உதவிகள், சலுகைகள் கிடைக்கும். மேலும் 5 ஆம் இட குரு அங்கிருந்து பாக்கியஸ்தானத்தையும், லாபஸ்தானத்தையும், ஜென்மராசியையும் பார்வையிடுவதால் மேலும் பலவித நன்மைகள் கிடைக்கும். உங்கள் முயற்சிகள் எளிதில் வெற்றி அடையும்.

**சொந்தத்தொழில் செய்பவருக்கு:-**

இந்த குருப்பெயர்ச்சியால் அதாவது 5 ஆம் இட குருவால் குருபகவான் உங்களுக்குப் பொன்னான பல நல்ல பலன்களை அள்ளித் தருவார். இதுவரை படாத பாடு பட்டு வந்த நீங்கள் இனி எல்லா விடயங்களிலும் முன்னேற்றம் அடைவீர்கள். உங்கள் சொந்தத் தொழில் மிகவும் சிறப்பாக நடைபெற்று நல்ல இலாபத்தைத் தரும். இதுவரை வராத பலன்கள் எல்லாம் உங்க[illegible] தொழில் தொடங்குபவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகி வரும். *

## கல்விச் சாலைக் காட்சிகள்



அளவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயப் பிரதிநிதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சி.நந்தகுமார், கல்லூரியின் மாணவத் தலைவன் சி.சிவகுமாரனால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதையும் பாடசாலை அதிபர் வே.சிவசிதம்பரம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இராமநாதன் கல்லூரியில் அண்மையில் வாணிவிழாவும் 2006 ஆம் ஆண்டு தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5, பிரிவு 2 தனி நடனம், நாட்டிய நாடகம், மாகாண மட்டத்தில் நடைபெற்ற காவிய கதா நடன நிகழ்வு ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை செல்வி புஸ்பா செல்வநாயகம் உரை நிகழ்த்துவதையும் பாராட்டுப் பெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.




பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அண்மையில் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. நிகழ்வில் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஆறு. திருமுருகன் நிகழ்த்துவதையும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வித்தியாலய அதிபர் க. சந்திரசேகரன், கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:சுழிபுரம்செய்தியாளர்)



சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந. ஸ்ரீகாந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் பொருத்தப்பட்ட மின் இணைப்பினை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் மின் ஆளியை அழுத்தி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (207)




இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தின் நவராத்திரி விழாவின் போது 2006 [illegible] 10 ஏ பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதன்போது பர[illegible] திருவரங்கன் என்ற மாணவன் நிறுவன சிரேஸ்ட ஆசிரியர் எஸ்.கே. மகாலிங்கத்தால் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி




திருமதி
**பவானி பிரபானந்தன்**

எமது பாடசாலையின்
ஆசிரியை திருமதி பவானி
பிரபானந்தன் அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரது
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர்,
ஆசிரியர்கள்,மாணவர்கள்.
**யா/அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாசாலை,**
அச்சுவேலி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 13 |
| 10 | 10 |
| 1934 | 2007 |



### அமரர் சின்னையா சத்தியமூர்த்தி

*(சிங்கர் கம்பனி முன்னாள் கிளை முகாமையாளர், பளை)*

எமது துயரத்தில் பங்கு கொண்டும், எமக்கு உற்ற துணையாக நின்ற அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (12.11.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)*

பண்ணாகம் தெற்கு, **மனைவி, மக்கள்,**
சுழிபுரம். (67782) **மருமக்கள்,பேரப்பிள்ளை.**

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சிவராசா

*(உதவிப் பணிப்பாளர், சுங்கத்திணைக்களம்)*

உசனைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய சுங்கத்திணைக்கள உதவிப்பணிப்பாளரான இராமலிங்கம் சிவராசா நேற்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பகவதி தம்பதியரின் மருமகனும், அருந்ததியின் அன்புக் கணவரும், நிஷ்யந்தன் (U.K), அரவிந்தன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, தக்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், கண்மணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசன், குலேந்திரன், இராஜேந்திரன், ஜெகதீசன், ராணி, இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.11.2007 புதன்கிழமை A.F.றேமன் மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2மணியளவில் கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி, தகவல்:
சாவகச்சேரி. (67862) **A.K.சபாரத்தினம்.**

## 49 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி பரஞ்சோதி சாரதா

| அன்னை மடியில் | அக்கிரம அழிப்பில் |
|---|---|
| 03.11.1965 | 25.09.2007 |

இன்று (12.11.2007) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட்,
சுளிபுரம், சுழிபுரம்.

## கோப்பாய் வடக்கில் குளம் புனரமைப்பு

கோப்பாய்,நவ.12

கோப்பாய் வடக்கு நாச்சிமார் கோயில் குளம் உலக உணவுத் திட்டத்தின்கீழ் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்ட இக் குளத்தின் மூலம் இந்த இடத்தைச் சூழவுள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதுடன் கோடை காலங்களில் விவசாயிகளின் நீர்ப்பாசனமும் சுலபமாக்கப்பட்டுள் ளதாக விவசாயி கள் தெரிவித்துள்ளனர்.

(203-72)

## கந்தசஷ்டி பாடல்கள் நூல்கள் வெளியீடு

கோப்பாய்,நவ.12

நூற்றி ஐந்து பாடல்களுடனான கந்தரனுபூதிநூல் கந்தசஷ்டி விரதத்தையொட்டி கு.தியாகராசக் குருக்களால் இலவசமாக வெளியிடப்பட்டுள் ளது.

இதனைப் பெற விரும்புவோர் நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

(203-72)

* *

கோப்பாய்,நவ.12

கந்தசஷ்டி விரதத்தையொட்டி கந்தசஷ்டிக்கவசம், கந்தரனுபூதி, வேல் வணக்கம் என்பவற்றை உள்ளடக்கிய நூல் நீர்வேலி திருமுருகன் செட்டியார் நிறுவனத்தினரால் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது.

இதனைப் பெற விரும்புவோர் நீர்வேலி கந்தசுவாமி கோயிற்கு அண்மையில் உள்ள திருமுருகன் திருமண மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி மகாத்மா வீதி சந்திக்கும் கும்பழாவளை விநாயகர் ஆலயத்திற்கும் இடையில் நல்ல சூழலில் 3 பரப்புக் காணி புதிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

*தொடர்பு: வி.குமார் (பந்தல் குமார்),*
*அளவெட்டி மத்தி, அளவெட்டி.*

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 12.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

- றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
- கோல்டன் பாம் - பருத்தித்துறை
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
- சிவம் ஸ்ரோர்ஸ் - ஏழாலை.

T.P.NO 222 2867
222 3529

(67800)

## புதிய சித்திரத் தேர்

கோப்பாய்வடக்கு ஸ்ரீசக்கராழ்வார் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்பெற்று வருகிறது.

எதிர்வரும் மகோற்சவத்திலும் இப்புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் து.

(203-72)

## 10ஆவது பிறந்தின வாழ்த்தும் புலமைப்பரிசில் பாராட்டும்



### கனகலிங்கம் சங்கீத்

இன்று (12.11.2007) திங்கட்கிழமை தனது 10ஆவது பிறந்த தினத்தை மகிழ்வுடன் கொண்டாடும் கனகலிங்கம் சங்கீத் பலகலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துவதோடு, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் 182 புள்ளிகளைபெற்று யாழ். மாவட்டத்தில் 7ஆவது இடத்தைப் பெற்ற சங்கீத்தை அம்மா, அப்பா, தம்பி, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, பெரியம்மா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர் மேலும் உயர் கல்வியில் சிறப்புற சித்திகள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

தோப்பு,
அச்சுவேலி. (சி/54316) **தாத்தா.**

## வலி. கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் கோப்பாய்

வலி. கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற இலக்கங்கள்.

முதலாம் பரிசு - 10856
2 ஆம் பரிசு 1064
3 ஆம் பரிசு 1845

**ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (1) 1963 | (2) 1918 | (3) 1645 | |
| (4) 0858 | (5) 2906 | (6) 1646 | (7) 1770 |

வெற்றி பெற்ற இலக்கங்களுக்குரியவர்கள் பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பரிசுகளை 14.11.2007 ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் மு.ப. 11மணிக்கு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.குறிப்பு - 30.11.2007 ஆம் திகதிக்குள் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளத் தவறின் அதன் பின் பரிசுப்பொருள்கள் வழங்கப்படமாட்டாது.

**செயலாளர்.**
*(சி/54329)* *வலி. கிழக்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்*


வசீகர தோற்றத்திற்கு
**சந்தனாலேப**
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)





*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*
**'சிவா நறுமணப் பூங்கா'** *சகல பார்மஸிகளிலும்*
*288, ஆஸ்பத்திரி வீதி,* *பெற்றுக்கொள்ளலாம்.*
*யாழ்ப்பாணம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 13 |
| 08 | 10 |
| 1938 | 2007 |



### அமரர் சின்னத்தம்பி கனகசபாபதி

**(படமாட உரிமையாளர், பண்டத்தரிப்பு)**

திதி: துதியை 12.11.2007

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய்
இன்முகம் காட்டி வாழ்ந்த அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
ஒருமுறை வந்தெம்மை பாரோ அப்பா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது.

கடந்த 13.10.2007 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.11.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார்கோயிலடி,
வடலியடைப்பு. **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஈழத் தமிழர் குறித்து சர்வதேசம் நீதியான முடிவை எடுக்கும் வேளை

★ஆள்மாறாட்டம் செய்யும் வகையில் இராஜதந்திரக் கடவுச்சீட்டை மோசடியாக வழங்கி, கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தைத் தவறான தகவல் கொடுத்து ஏமாற்றி 'விஸா' பெற்று, பிரிட்டிஷ் அரசுக்கு உண்மைகளை ஒளித்து, சட்ட முறைமைகளுக்கு மாறான வழியில் கருணாவை பிரிட்டனுக்குள் கடத்தியிருக்கின்றது இலங்கை அரசு என்ற தகவல் இப்போது அம்பலமாகிவிட்டது.

★ இலங்கைக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதை அடுத்த ஜனவரி முதல் கனடா, நெதர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகள் அடியோடு நிறுத்தத் தீர்மானித்து விட்டன. இலங்கை அரசு பாதுகாப்புச் செலவினத்துக்குப் பெரும் தொகை நிதியை ஒதுக்கி யுத்த வரவு - செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்தமையை அடுத்தே இந்த நாடுகள் இவ்வாறு தீர்மானித்திருக்கின்றன என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

★ஹெய்ட்டியில் ஐ.நாவின் அமைதிப் படை நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக அனுப்பப்பட்ட சுமார் 950 இலங்கைப் படையினரில் நான்கு அதிகாரிகள் உட்பட 110 துருப்பினர் பாலியல் குற்றச்சாட்டுகளின் பேரில் ஐ.நாவினால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராக இராணுவ நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

★அரசுப் படைகளின் துணைப்படையாக இயங்கும் கருணா குழு அல்லது பிள்ளையான் அணியின் நடவடிக்கைகள் குறித்து மிக அவதானமாக இருக்கும்படி கிழக்கில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் எச்சரிக்கப்பட்டிருக்கின்றன.

★ அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் ஆட்சேபம் மற்றும் அதிருப்தியையும் மீறி ஈரானுக்கான தமது சர்ச்சைக்குரிய பயணத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டபடி அடுத்தவாரமளவில் முன்னெடுப்பார் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

★ இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான தென்னிலங்கையின் யோசனைத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தனது திட்டத்தை இந்தா அறிவிக்கப்போகின்றது, அந்தா வெளியிடப்போகின்றது என்று அயல் வல்லாதிக்க நாடான இந்தியாவுக்கும் மற்றும் மேற்குலகுக்கும் கடந்த சுமார் ஒன்றரை வருடங்களாக படம் காட்டி வந்த இலங்கை அரசுத் தலைமை, இப்போது அதனை மேலும் தள்ளிப்போட்டு, ஜனவரி வரை - அடுத்த ஆண்டு முற்பகுதி வரை - ஒத்திவைத்து விட்டது.

★ இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் முழு மூச்சோடும், இதய சுத்தியோடும் செயற்படுங்கள் என மேற்குலக நாடுகள் கொழும்பை வற்புறுத்தி வருகையில், அந்த அழுத்தத்தை உதாசீனம் செய்து தனது போரியல் வெறிப்போக்குத் திட்டத்தை இலங்கை அரசு - அப்பட்டமாக வெளியே தோற்றக்கூடிய விதத்தில் - முன்னெடுத்து வருகின்றது.

- இவை எல்லாம் சர்வதேச சமூகத்தின் முன்னால் கொழும்பு அரசுத் தலைமைக்கு அண்மைக்காலத்தில் 'நற்பெயரையும் கீர்த்தியையும்' (?) வேண்டித்தந்த விவகாரங்கள் பற்றிய செய்திகளாகும்.

அதேசமயம், மறுபுறத்தில் 'பயங்கரவாத இயக்கம்' என மேற்குலக நாடுகள் பலவற்றில் பட்டியலிடப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் 'கெட்ட பெயர்' மேற்குலக நாடுகளில் மங்கித் தேய்ந்து வருவதும் பலதரப்பினாலும் அவதானிக்கப்பட்டு விதந்துரைக்கப்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்நாட்டில் வெகுவாகக் குறைந்து விட்டன. சிவிலியன் இலக்குகளைப் புலிகள் தாக்குகின்றனர் என்ற கூக்குரல் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அடங்கிவிட்டது. சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், பலவந்தமாக நிதி அறவிடல், கப்பம் கோரல், ஆட்கடத்தல் போன்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுடன் புலிகளை நேரடியாகத் தொடர்புபடுத்தும் எத்தனங்கள் குறைந்து வருகின்றன.

இதேசமயம், தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய அரசியல் பொறுப்பாளர் பா. நடேசன், அப்பதவியைத் தாம் ஏற்ற பின்னர், கொழும்பு ஆங்கில வார இதழுக்கு வழங்கிய தமது கன்னிப் பேட்டியில் இதை ஒட்டிய ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது. "எங்கள் மக்களின் உரிமைகளுக்கான எமது போராட்டம் நீதியானது. அது சர்வதேச நியமங்கள் (வழக்காறுகள்) மற்றும் சட்டங்களுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுகின்றது. அதனால்தான் அதை (அந்தப் போராட்டத்தை) அங்கீகரியுங்கள் என்று சர்வதேசத்தைக் கேட்கிறோம்." - என்ற சாரப்பட அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதாவது, தன்னை சட்டரீதியான இறைமையுள்ள அரசு என்று கூறிக்கொள்ளும் கொழும்பு நிர்வாகத்தின் செயற்பாடுகள், போக்குகள் சர்வதேச நியமங்களுக்கு முரணானவையாக - சர்வதேச அங்கீகாரத்துக்கு மாறானவையாக - முன்னெடுக்கப்படுகின்றன. அதேசமயம், முக்கிய மேற்குலக நாடுகளால் 'பயங்கரவாத இயக்கமாக' அறிவிக்கப்பட்ட புலிகளின் செயற்பாடும், போக்கும் முன்னேற்றகரமானவையாக - மனித உரிமைகள் உட்பட சர்வதேச நியமங்களை மதிப்பவையாக - மாறிவருகின்றன. இந்த விவகாரம் மேற்குலகப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் போன்ற தரப்புகளால் கூர்ந்து அவதானிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மேலும் மேற்குலகின் முக்கிய நாடான பிரிட்டனிடம், இலங்கை அரசுப் படைகளின் கூலிப்படைத் தளபதியாகச் செயற்பட்ட கருணா சிக்கியிருக்கின்றார். அவரிடம் இருந்துதான் 'கறந்தெடுக்கும்' உண்மைகள் மூலம் கொழும்பின் நீதியான(?) செயற்பாட்டுப் போக்குக் குறித்துத் திட்டவட்டமான முடிவு ஒன்றுக்கு வருவதற்கான சான்றுகள், ஆதாரங்கள், விளக்கங்கள், தகவல்கள் போன்றவற்றை மேற்குலகு சார்பாக தேவைக்கு விஞ்சிய அளவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றின் அடிப்படையில் நீதியான முடிவு ஒன்றை சர்வதேசம் எடுக்கும் காலம் நெருங்கி வருகின்றது. தமிழர் தரப்பின் போராட்டம் குறித்து சர்வதேசத்தின் போக்கில் மீளாய்வு மாற்றத்தை அந்த முடிவு ஏற்படுத்தும் எனத் தமிழர்கள் நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கையோடு காத்திருக்கின்றார்கள்.

# முகமாலை சமரின் தோல்விக்கு யார் பொறுப்பு? அரசு - படைத் தரப்புகளுக்கிடையில் முரண்பாடு

தென்னந் தோப்புக்கள், நெல் வயல்கள், பச்சை மரங்கள், மண்திட்டுகள் என இரண்டு கி.மீ.அகலமானதும், 25 கி.மீ. நீளமானதுமான நீரேரியை இங்கு குறிப்பிடவில்லை. யாழ். குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் உள்ள 12 கி.மீ. அகலமான பகுதியே இதுவாகும். இந்தப் பகுதிக்கு கிழக்கில் உள்ள பகுதி நீளமான கடலாகும். மேற்குப் பகுதி கடல் நீரேரியாகும்.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான முன்னணி பாதுகாப்பு அரண்கள் மேற்கில் கிளாலியில் இருந்து நடுவே முகமாலையை உள்ளடக்கியதாக, கிழக்கில் நாகர்கோவில் வரை நீண்டு உள்ளது. இந்த நிலைகள் குடாநாட்டின் கழுத்துப் பகுதி வரை மட்டுமல்லாது கடல் மற்றும் நீரேரி பகுதி வரையும் சிறிது தூரம் நீண்டுள்ளது. இது எதிர்த்தரப்பின் ஊடுருவித் தாக்குதலை தடுக்கும் உத்தியாகும்.

கடந்த ஆண்டு தாக்குதலின் தெரிவித்திருந்தார். ஏனெனில் அவரால் அதனை மறைக்க முடியவில்லை.

முன்னர் கைது செய்யப்பட்ட படையினர், ஆயுதங்கள் தொடர்பான புகைப்படங்களை விடுதலைப் புலிகள் வெளியிடுவதுண்டு.

இது படையினர் தொடர்பான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிடும். இம்முறையும் படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் புகைப்படங்களை அவர்கள் வெளியிட்டிருந்தனர்.

போர் நிறுத்த ஒப்பந்தமும் எல்லைகளை மதிப்பதும் காகிதத்தில் மட்டும் உள்ளதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவார். எனவே அதனை மீறுவது குறித்து அவர் கவலைப்படவில்லை.

### அரசியல் லாபமே அரசின் நோக்கம்

முழு நடவடிக்கையும் அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை. வரவு - செலவுத் திட்டத்தை வாய்ந்ததாக அமைந்திருந்தது. கடற்படையினர், விடுதலைப் புலிகளின் நான்கு கப்பல்களையும் அண்மையில் அழித்திருந்தனர்.

கிழக்கில் படையினர் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருந்தனர். ஆனால் வன்னியில் மெதுவாக முன்நகர்வதை விடுத்துத் திடீரென இரத்தம் சிந்தியுள்ளனர்.

### படையினர் - அரசு கருத்து வேறுபாடு?

வடபகுதியில் சரியான நேரம் வரும்வரை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளே தேவையானது. போரானது இயலுமானவரை படை ஜெனரல்களின் பொறுப்பில் விடப்படவேண்டும்.

ஆனால் அரசியல் லாபங்களுக்காகச் சமர்களைத் தெரிவுசெய்வது மிகவும் ஆபத்தானது. கடந்த வருடம் படையினர் வலிந்த தாக்குதல்களை நடத்தப்போவதில்லை என அனைத்துலக சமுகத்தையும் நம்ப வைக்க

# முகமாலையில் புலிகளின் முன்னரங்குகளை கைப்பற்றும் நோக்கம் ஈடேறவில்லை

போது 175 படையினர் கொல்லப்பட்டதுடன் 400 பேர் படுகாயமடைந்தனர். கடந்த ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் நாள் விடுதலைப் புலிகளும் முகமாலையில் வலிந்த தாக்குதலை நடத்தியிருந்தனர். கடந்த ஆண்டு நடைபெற்ற இந்த இரு சமர்களும் இந்தப் பகுதி தற்காப்புச் சமருக்கே உகந்தது என்பதை உணர்த்தியிருக்கும். படையினருக்கும் அனுகூலமுள்ள கவசப் படையும், வான்படையினரும் கூட இந்தக் களத்தில் பயன்படவில்லை.

விடுதலைப் புலிகளின் துல்லியமான பீரங்கித் தாக்குதலானது படையினருக்கு கவலையளிப்பதாகவே உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சந்திரசிறி மீதும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. எனினும் அது வெற்றி பெறவில்லை. ஆனால் இந்த வருடத்தின் தொடக்கத்தில் கவசத் தாக்குதல் படை பிரிகேட்டின் கட்டளை அதிகாரியான லெப். கேணல் ரால்ப் நுகெரா மீது வெற்றிகரமான பீரங்கித் தாக்குதலை புலிகள் மேற்கொண்டிருந்தனர்.

### வெவ்வேறு காரணங்கள் கூறப்படுவது ஏன்?

எல்லாவற்றையும் விட இந்தக் களமுனையானது திறந்த பகுதியாகும். எனவே விடுதலைப் புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களுக்கு படையினர் இலகுவில் இலக்காகி

அறிவிக்கும் போது புதிய முன்னரங்க நிலையையும் அறிவிக்கும் பொருட்டே பெரிய அளவிலான படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய படை நடவடிக்கையின் போதும் தற்போதைய அரசு, அரசியல் லாபங்களை அடைய முற்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட சம்பூர் மீதான படை நடவடிக்கையைச் சுதந்திரக்கட்சியின் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்துப் பெரும் அரசியல் லாபங்களைப் பெறும் வண்ணம் அரசு சில நாள்கள் தாமதப்படுத்தியிருந்தது.

**நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது முகமாலையில் மேற்கொள்ளப்பட்டது அரசியல் மயப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையா? படையினருக்கு 165 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்ட போதும் முகமாலையில் ஏற்பட்ட தோல்வி எல்லோருடைய கண்களையும் திறந்திருக்கிறது.**

கடந்த ஆண்டு முகமாலையில் பெறப்பட்ட அனுபவத்தில் இருந்து இம்முறை இராணுவம் தனது இழப்புக்களை இயலுமானவரை குறைவாக்கியுள்ளது.

கிளாலி, முகமாலை, நாகர்கோயில் களமுனைகள் தற்காப்புச் சமருக்கே ஏற்றவை. வான்படையினர் தாம் தாக்கி அழித்துள்ளதாகக் கூறியபோதும் விடுதலைப் புலிகள் பூநகரியில் உள்ள பீரங்கி நிலைகளையும் பளையில் உள்ள மோட்டார் நிலைகளையும்

மஹிந்த முற்பட்டபோது முகமாலைச் சமர் நிகழ்ந்தது.

படைத் துறையானது அரசின் ஒரு பகுதியாகும். எனவே அரசின் பொதுவான கொள்கைகளுக்கமைய பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், படையதிகாரிகள் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

போரிலும் சமாதானத்திலும் அரசு மாறினாலும் அதன் கொள்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது.

போரில் எல்லா சமர்களும் வெல்லப்படுவதில்லை. வியட்நாம் போரில் அமெரிக்கா பெரும்பாலான சமர்களில் வெற்றியீட்டியிருந்தது. ஆனால் போரை இழந்து விட்டது. சில நேரங்களில் நீங்கள் எடுக்கும் முடிவுக்கான விலைகளை நீங்களே செலுத்த வேண்டியிருக்கும்.

### தலைக்கு மேல் வாள் தொங்குகிறது

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான இரண்டாவது அறிக்கைக்குப் பின்னரான வாக்கெடுப்பானது மஹிந்த அரசின் தலைமைக்கு மேல் வாள்

# அரசாங்கத்தின் தலைக்கு மேல் தொங்குகிறது வாள்!

விடலாம். இந்த நிலையிலும் படையினர் ஏன் கடந்த புதன்கிழமை நடவடிக்கையை மேற்கொண்டனர்? காலநிலையும் பாதகமாகவே இருந்தது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை குறித்து வேறுபட்ட இடங்களிலிருந்து பலதரப்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், நாம் அதற்கு முன் மற்றுமொரு காரணத்தைப் பார்க்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராகவே தாம் தாக்குதல் நடத்துவதாக படைத்தரப்பு தொடர்ந்து தெரிவித்து வருகின்றது. இந்தபடையினரின் பிரசார மையமும் அதனையே தெரிவித்திருந்தது. ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, படையினரே நடவடிக்கையை மேற்கொண்டதாக

**நாளை**

| | |
|---|---|
| ஐப்பசி - 27 | செவ்வாய்க்கிழமை 13.11.2007 |
| திதி : திருதியை | மு.ப. 10.13 |
| நட்சத்திரம் : | மூலம் முழுவதும் |
| சுபநேரம் | : 10.37 - 12.07 |
| ராகுகாலம் | : 03.07 - 04.37 |

சதுர்த்தி விரதம்

பேணிவருகின்றனர். எனவே படையினர் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையே இந்தப் பகுதியில் மேற்கொள்ளவேண்டும்.

**கொழும்பிலிருந்து வெளி வரும் 'த நேசன்' ஆங்கில வார இதழின் பாதுகாப்புத்துறைப் பத்தியில் (11.11.2007) வெளிவந்த கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

விடுதலைப் புலிகள் தமது தற்கொலைப் படையினரையும் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டு உயர்ரக இலக்குகளை அழிப்பதையே முதன்மைப்படுத்தி வருகின்றனர். அவர்கள் பெரும் தாக்குதல் சமரைத் தவிர்த்தே வருகின்றனர். ஆனால் நவம்பர் மாத இறுதிப் பகுதியில் விடுதலைப் புலிகள் இந்த அச்சில் தாக்குதல் நடத்தி யாழ். குடாநாட்டை நோக்கி முன்நகரலாம் என்று படைத்தரப்பில் ஒரு பிரிவினர் நம்புகின்றனர்.

படையினரின் வன்னி மீதான நடவடிக்கையை தடுப்பதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஸ்ரீலங்கா வான்படையினர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீது தாக்குதலை நடத்திய பின்னர் நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதல் மிகமுக்கியம்

தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்றது.

அதாவது வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றம் தானாகக் கலைக்கப்பட்டதாகவே அர்த்தம்.

அரசு தப்புவதைத் தீர்மானிக்கும் முக்கிய அரசியல் கட்சியாக ஜே.வி.பி. உள்ளது. அது விடுதலைப் புலிகளை முறியடிப்பதை ஆதரிப்பதுடன், படையினரின் நடவடிக்கைக்கும் முழுமையான ஆதரவை அளித்து வருகின்றது.

தமிழ்ச்செல்வனை நினைத்து விடுதலைப் புலிகள் வருத்தத்தில் இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிலா பெருமெடுப்பிலான நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப்பட்டது?

இறக்கும் போது தமிழ்ச்செல்வன் பூநகரிப் பகுதிக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர்கள் வருத்தத்தில் இருந்தார்களோ இல்லையோ எதிர்த்தாக்குதலானது கேணல் தீபனினால் திறமையாகத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது அநுராதபுரம் வான்படைத் தளம் மீதான தாக்குதலில் இருந்து வேறுபட்டது.

அங்கு விடுதலைப் புலிகள் தாக்கும் போது படையினர் சுப்பர் குறஸ்,

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் பேரணி சென்னையில் இன்று நடத்தத் தடை!

## மீறி நடத்துவோம் என வைகோ, நெடுமாறன் சூளுரை

சென்னை,நவ.12

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலையைக் கண்டித்தும் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்தும் இன்று சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பேரணிக்கு சென்னை மாநகரப் பொலிஸ் ஆணையாளர் தடை விதித்திருக்கிறார்.

எனினும் தடையையும் மீறி பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என மேற்படி பேரணியை ஏற்பாடு செய்துள்ள தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பழ. நெடுமாறனும், மதி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும் சூளுரைத்திருக்கின்றனர்.

இந்தப் பேரணி பழ. நெடுமாறன் தலைமையில் இன்று மாலை 4 மணிக்கு சென்னை மன்றோ சிலை முன்றிலில் இருந்து ஆரம்பித்து சேப்பாக்கம் அரச விருந்தினர் மாளிகை அருகே முடிவடையும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பேரணிக்குத் தடை விதிக்கப்பட்டமை குறித்து பழ. நெடுமாறன் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் ஊர்வலத்திற்குச் சென்னை மாநகர ஆணையாளர் தடை விதித்திருக்கின்றமையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது தமிழக அரசின் மனித நேயமற்ற போக்கினையும் தமிழர் விரோதப் போக்கினையும் எடுத்துக்காட்டுகிறது.

திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மன்றோ சிலையின் முன்னிருந்து திட்டமிட்டபடி தமிழ்ச்செல்வன் இரங்கல் ஊர்வலம் புறப்படும். அனைத்துக் கட்சித் தோழர்களும் தமிழ் உணர்வாளர்களும் திரண்டு வந்து தடையைத் தகர்த்து தமிழர் மானத்தைக் காக்க முன்வருக என அழைக்கிறேன். - என்று உள்ளது.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நடைபெறும் ஊர்வலத்தில் தடையை மீறி ம.தி.மு.க. பங்கேற்கும் என்று அதன் பொதுச் செயலாளர் வைகோவும் அறிவித்துள்ளார்.

இந்தப் பேரணியில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமத், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கௌத்தூர் மணி ஆசியோரும் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

# இயற்றாலையில் இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,நவ.12

வரணி, இயற்றாலைப் பகுதியில் இராணுவத்தினர் மீது கிரனேட் வீசிவிட்டு தப்பி ஓட முயன்ற இளைஞர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்புத் தெரிவித்தது.

அவர் வைத்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் சம்பவத்தின் பின்னர் கண்டெடுக்கப்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டது. (அ-5)

# யாலப் பகுதிக்கு இராணுவத் தளபதி

கொழும்பு, நவ.12

யாலப் பகுதியின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்வதற்காக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுப்பகல் யாலப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். யாலப் பகுதியில் உள்ள படைத்தளத்தில் அப்பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள படை அதிகாரிகளுடன் இராணுவத்தளபதி கலந்துரையாடலை நடத்தினார்.

இக்கலந்துயைாடலில் பிரிகேடியர் சுஸந்த ரணசிங்க, விசேட பொலிஸ் அதிரடிப் படைப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரிய, சிவில் பாதுகாப்பு படைத்தளபதி றியல் அட்மிரல் சரத் வீரசேகர, தெற்குப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே ஆகியோர் கலந்துகொண்டனர். (சி)

# வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டோர் அந்தரிப்பு!

கொழும்பு, நவ.12

இத்தாலியில் வேலை பெற்றுத் தரப்படும் என உறுதியளிக்கப்பட்டு கூட்டிச் செல்லப்பட்ட சுமார் ஐம்பது இலங்கையர்கள் வழியில் மத்திய கிழக்கு நாடான டுபாயில் ஹோட்டல் ஒன்றில் பரிதவிக்க விடப்பட்டிருக்கின்றனர்.

''இத்தாலியில் வேலை பெற்றுத்தரப்படும் என உறுதியளித்து, இவர்களிடம் கணிசமான தொகையைக் கறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிக்காரர்கள், இவர்களை இத்தாலிக்குக் கூட்டிச் செல்லும் வழியில் டுபாயில் ஹோட்டல் ஒன்றில் தங்க வைப்பதாகத் தெரிவித்து, ஹோட்டலில் விட்டுவிட்டு அவர்களின் கடவுச்சீட்டுகளுடன் கம்பி நீட்டிவிட்டனர். ஹோட்டல் கட்டணம் செலுத்தப்படாததால் இவர்கள் ஹோட்டலை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருக்கின்றார்கள். டுபாய்க்கு நுழைவதற்கு உல்லாசப் பயணிகளுக்குரிய விஸா பெற்றுக்கொள்ள இவர்கள் இப்போது அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படும் நிலையில் உள்ளனர்'' - என்று இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# கம்பஹா - கொலன்னாவை தேடுதல்களில் 75 பேர் கைது!

கம்பஹாப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகத்தின் பேரில் 61 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஏற்கனவே நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் - 37 பேர், போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் - 21 பேர், தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்யத்தவறியவர்கள் - மூவர் அடங்குகின்றனர் என கம்பஹாப் பிராந்திய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயசம்பத் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலன்னாவை வெல்லம்பிட்டிய, எண்ணெய் சுத்திகரிப்பு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணிக்கான தடையின் பின்னணியில் காங்கிரஸ் தமிழகப் பிரிவு இருப்பதாக பேசப்படும் நிலையில் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் வாள்வெட்டுச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. (அ)

## பாண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாண்(450கி) - 43 ரூபா, கிறீம் பணிஸ் (150 கி) - 23 ரூபா, ரீபணிஸ்(130 கி), சங்கிலி பணிஸ் (130 கி)- 21 ரூபா, கொம்பு பணிஸ்(70 கி)-13 ரூபா, அடைக்கேக் - 17 ரூபா. (அ-1)

## ஜே.வி.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரரும் நாடாளுமன்ற உறுப் பினருமான பஸில் ராஜபக்ஷ மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான தகவல்கள் வெளியானதையடுத்து கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்த, தமது கட்சியை பிளவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு தமது கட்சி தேவையான நேரத்தில் பதில் அளிக்கும் - என்றார். (அ)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற கடனுக்காக அவ்வங்கிகளுக்குச் செலுத்தியுள்ளது அரசு.

இதன் அடிப்படையில் - மத்திய வங்கிக்கு மூவாயிரம் கோடி ரூபாவும், மக்கள் வங்கிக்கு ஆயிரத்து 300 கோடி ரூபாவும், இலங்கை வங்கிக்கு 900 கோடி ரூபாவும் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 5 ஆயிரத்து 200 கோடி ரூபா இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது. 400 கோடி ரூபா மாத்திரம்தான் எஞ்சியுள்ளது.

வெளிநாட்டு வங்கியிடமிருந்து கடனாகப் பெறும் நிதியைக்கொண்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளப் போவதாக அரசு ஏற்கனவே மக்களிடம் கூறியிருந்தது. இப்போது மக்களை அரசு ஏமாற்றி விட்டது.

அதிகளவு வட்டி அடிப்படையிலேயே இந்தக் கடன் பெறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தில் ஒரு சதமேனும் மக்களுக்குப் போய்ச் சேராத நிலையில், இந்த முழுப் பணத்தையும் மக்கள்தான் வட்டியுடன் திருப்பிச் செலுத்தவேண்டியேற்பட்டுள்ளது. (சி)

**Diploma in Computerized Accounting Packages (DICAP)**

Accpac + Quick Books pro + MYOB
Accounts Teacher
T. Lintus
(H.N.Dip. in Acc)
**IDM** computer studies (pvt) Ltd.
Jaffna.
(678697)

## காவல்துறைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார் என அப்பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

### தமிழக முதல்வருக்கு நன்றி

மேலும் தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி இரங்கல் கவிதை வடித்தமைக்கும் இத்தருணத்தில் அப்பேட்டியில் நன்றி தெரிவித்திருக்கிறார் நடேசன்.

''தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, தமிழீழம் மீதும், ஈழத் தமிழர்கள் மீதும் மட்டில்லா அன்பு கொண்டவர். ஈழம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழவேண்டும் என்பதை விரும்புபவர் கருணாநிதி. தமிழ் இன உணர்வைக் கவிதை வடிவில் வெளிப்படுத்தி கலைஞர் தெரிவித்த இரங்கல் செய்தி, ஆறாத்துயரில் ஆழ்ந்திருந்த எம் எல்லோரையும் ஓரளவேனும் ஆறுதலடையச் செய்துள்ளது. அதற்காக எமது நன்றிகளை நவில்கின்றோம்'' - என்றார் நடேசன்.

''கருணாநிதியின் இரங்கல் கவிதைக்கு அ.தி.மு.கவின் பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் அதற்காக தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றாரே?'' என 'நக்கீரன்' சார்பில் கேட்கப்பட்டதற்கு, ''தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு தமிழகத்திலிருக்கும் ஆறரைக்கோடித் தமிழர்கள் உணர்வுகளையே தனது இரங்கலில் வெளிப்படுத்தினார் கலைஞர்'' - என்றார் நடேசன். (சி)

## நம்பகரமான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

இந்தத் தீர்வானது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நம்பகரமான,நிலையான அரசியல் பரவலாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

அர்த்தமில்லாத பயங்கரவாதச் செயல்கள் ஒருபுறமும் ஆயுதப் படைகளுக்கான திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் மறுபுறமும் நாட்டில் மேலும் மேலும் இழப்புகளையும் அழிவுகளையுமே ஏற்படுத்தும்.

சமாதானம் என்பது பேச்சு மேசையில் கட்டி எழுப்பப்படவேண்டும். அத்துடன் சமாதான உடன்படிக்கை மக்களின் நம்பிக்கை வாக்குகளையும் வென்றிருக்க வேண்டும் - என்றார். ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார் -

இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்கவில்லை என்பதனால் இந்தியா இலங்கைப் பிரச்சினையை புறக்கணித்து விட்டது - பாராமுகமாக இருக்கின்றது என்று அர்த்தப்படுத்தி விட முடியாது.

இந்தியா இந்தப் பிராந்தியத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து மிகவும் கரிசனையாக இருக்கின்றது. இலங்கை அரசையும் தமிழ் சமூகத்தின் தலைவர்களையும் சமாதானப் பேச்சின் ஊடாக அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்படி இந்தியா வேண்டி வருகின்றது. (அ-சி)

## முகமாலை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பர் ஸ்ரார் களியாட்டத்தில் மூழ்கியிருந்தனர்.

எதிரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது தாக்குதலை நடத்தும்போது வேறு சில காரணிகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அந்தப் பகுதிகளில் பொறிவெடிகள் இருக்கலாம். மிதிவெடிகள், கிளைமோர் குண்டுகளை வெடிக்கச் செய்யலாம். பொறிவெடிகள், போலியான காவலரண்கள், குழிகள் என்பன ஓர் உயரக் கெரில்லா அமைப்புக்கு எதிரான சமரில் மரபு வழியிலான படையினர் சந்திக்கும் நெருக்கடிகள்.

### யார் பொறுப்பு ஏற்பது?

முகமாலைப் பகுதி மீதான படை நடவடிக்கை கைவிடப்பட்ட பின்னர் வியாழக்கிழமை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்.குடாநாட்டிற்குப் பயணம் மேற் கொண்டிருந்தார். அவர் அங்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியைச் சந்தித்தார்.

அரசியல் காரணங்களுக்காக [illegible] கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை அவர் கைகழுவி விட்டதாகச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு முகமாலையில் நடைபெற்ற சமருக்கான பொறுப் பைச் சரத் பொன்சேகா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஏற்றிருந்தார். ஆனால் இந்தத் தடவை யார் அதற்கான பொறுப்பை ஏற்கப்போகின்றனர்?

இந்தப் படை நடவடிக்கையின் நோக்கம் முகமாலையில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி அரண்களைக் கைப்பற்றுவதே.

இந்த நடவடிக்கையில் படையினரின் பின்னிருப்புத் தாக்குதல் பிரிவான 53 ஆவது படையணியும், அந்தப் பகுதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பான /55 ஆவது படையணியும் பங்குபற்றி யிருந்தது.

முகமாலை முன்னணி அரண்களில் 55 ஆவது படையணியைச் சேர்ந்த 4 ஆவது இலங்கை இலகு காலட்படை பிரிவு, 7 ஆவது விஜயபா றெஜிமென்ட், 4 ஆவது கெமுனுவோச், முதலாவது இலங்கை இலகு காலாட்படை ஆகியன ஈடுபட்டு வருகின்றன. வான் நகர்வு படையணியின் நடவடிக்கைக்கு உதவுமாறு இந்தப் படைப் பிரிவினருக்கும் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகளை அழிக்கும் பொருட்டு படையினர் அவர்களின் முன்னணி அரண்களை நோக்கி நகர்ந்தனர்.

படையினருக்கு உதவியாகப் பல்குழல் உந்துகணை செலுத்தி மற்றும் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளும் 81 மி.மீ மற்றும் 120 மி.மீ.மோட்டார் தாக்குதல்களை பளையில் இருந்தும், பீரங்கித் தாக்குதலைப் பூநகரியில் இருந்தும் மேற்கொண்டிருந்தனர்.

### புலிகளின் பொறிக்குள் சிக்கினர்

இந்த நடவடிக்கையில் 11 படையினர் கொல்லப்பட்டதாகவும் 50 பேர் படுகாயமடைந்திருந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

படையினரிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களின் புகைப்படங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் பொறி வெடிகளைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த படையினரும் காயமடைந்திருந்தனர்.

பொறிவெடிகள், குழிகள் போன்றவற்றைத் தோண்டியும் விடுதலைப் புலிகள் படையினரைப் பொறிக்குள் சிக்க வைத்திருந்தனர்.

வான் படையினர் எம்.ஐ - 24 ரக தாக்குதல் உலங்குவானூர்தியைப் பயன்படுத்திய போதும் பாதகமான காலநிலை காரணமாக அதன் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

எனினும் இந்தப் படை நடவடிக்கையில் 20 படையினர் கொல்லப்பட்டதுடன், 115 பேர் காயமடைந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org